**மேலும் இலவச பிரதிநிதிகளுக்கும், இலவச பத்திரிக்கை பிரதிநிதிகளுக்கும், எங்களை தொடர்பு கொள்ளுங்கள்**





இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk




# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

இதழ் 9

- விக்லிஃப்பும் வேதாகமமும்
- சுவாசம்
- நல்ல சமாரியன்
- ஒழுங்கு செய்யாத பொருத்தங்கள்
- ஞானஸ்நானம் - இது என்ன ? இதன் பொருள் என்ன ?

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கி றி ஸ் ட டெ ல் ஃ பி ய ன் ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் “கிறிஸ்துவில் சகோதரர்” என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் ‘வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற’ மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info
http// www.choose2live.info/
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk

**புது சிருஷ்டி பதிப்பாளர் குழு**

| | |
|---|---|
| லினஸ் டேனியேல் | : தலைமை ஒருங்கிணைப்பாளர் |
| ராஜபட்சம் ஆனந்தா | : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர் |
| பவித்ரா | : நிர்வாகம், உபப்பதிப்பாளர் |

திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ் மற்றும் சந்திர மோகன் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.

*“இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின” (2. கொரிந்தியர் 5:17).*



# இரக்கமுள்ளவர்களாயிருங்கள் !

சமீபத்தில் போட்டி விளையாட்டு ஒன்றின் வானொலி ஒலிபரப்பைக் கேட்டுக்கொண்டிருந்தோம். ரசிகர்கள் வீரர்களில் ஒருவனை நோக்கி நக்கல் ஒலியை மிகச் சத்தமாக எழுப்பிக் கொண்டிருந்ததால், வர்ணனையாளர்கள் ரசிகர்களின் இந்த நக்கல் ஊளை குறித்து விமர்சிக்க ஆரம்பித்தனர். ஒரு விமர்சனம் எங்கள் மனதில் ஆழமாகப் பதிந்தது. “பரிசுத்தவான்கள் தான் நீதியைக் கேட்கிறார்கள், நாம் இரக்கத்தைக் கேட்கிறோம்.” இவ்விதமாக எதிர்பார்க்கும் ரசிகர்கள் தங்களுக்கு நீதி செய்யப்படவேண்டும் என்றும் மற்றவர்களிடம் பரிபூரணம் வேண்டுமென்றும் கேட்கிறார்கள். அவர்களின் வீரன் அவர்கள் எதிர்ப்பார்ப்புக்கேற்ப செயலாற்றா விடில் நக்கலான ஊளையிடுகிறார்கள். அர்ப்பணிப்புள்ள ஒரு விளையாட்டு வீரன் மகிழ்ச்சியாக ஆட முயலும்போது இந்த நக்கலை விரும்புவதில்லை. ஆனால் இதுதான் அவனுக்குக் கிடைக்கிறது. ஊளையிடுகிற ரசிகனால் வீரனைப்போல் நன்றாக ஆட முடியாவிடினும் கஷ்டப்பட்டு விளையாடிக் கொண்டிருக்கும் வீரனுக்கு தன் மனதிலுள்ளதை வெளிப்படுத்தும் முறையை ரசிகன் நியாயப் படுத்துகிறான்.

“இப்போது நான் கர்த்தருடைய கையிலே விழுவேனாக அவருடைய இரக்கங்கள் மகா பெரியது. மனுஷர் கையிலே விழாதிருப்பேனாக. எனத் தாவீது கூறியதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ‘துன்மார்க்கருடைய இரக்கமும் கொடுமையே’ என சாலொமோன் கூறுகிறான்.

நமக்கு அதிகமான இரக்கம் தேவைப்படுகிறது என்பது உண்மையே. தனக்கே இப்படி இரக்கம் தேவைப்படுகையில், மனிதன் ஏன் மற்றவர்கள் விஷயத்தில் நீதி செய்யப்பட வேண்டுமெனக் கேட்கிறான்? அது பழைய துரும்பு - உத்தரம் கதைதான். நம் கண்ணிலுள்ள உத்தரத்தைப் பார்க்காமல் நம் சகோதரன் கண்ணிலிருக்கும் புள்ளி போன்ற ஒரு துரும்பு குறித்தவாறு காண்பது மிகவும் எளிதானது. மனித இயல்பு எப்போதுமே இப்படித்தான் இருந்து வந்துள்ளது.

விபசாரத்தில் கையும் களவுமாய்ப் பிடிப்பட்ட பெண்ணைக் குற்றஞ்சாட்டியவர்களும் குற்றவாளிகள். பாவம் எதுவும் செய்யாத இயேசு அவர்களை காட்டிலும் அந்த பெண்ணிடத்தில் அதிக நியாயமுள்ளதாகவும், மன்னிக்கிறவராகவும் இருந்தார் என்ற விஷயம் யோசிக்கத்தக்க சிலர் நம்புகிறார்கள். ‘உங்களில் இந்தப் பாவமில்லாதவன் எவனோ இவள் மேல் முதலாவது கல்லெறியக் கடவன்’ அவளை குற்றஞ் சாட்டினவர்களுக்கே இரக்கம் தேவைப்பட்டிருந்தாலும், அவள் விஷயத்தில் அவர்கள் நினைக்கிறபடி நீதி செய்யப்பட வேண்டுமென்று கேட்டார்கள். இன்றும் இதே சிந்தனை தான் பெரிதாகக் காணப்படுகிறது. சில வேளைகளில், உரக்கக் குரலெழுப்புவோர் பிறரை அதிகம் மன்னிக்க வேண்டியவர்களாயிருப்பதை அவர்களில் தனிப்பட்ட வாழ்க்கையில் காண்கிறோம். இது சபைகளிலும் விளையாட்டு உலகிலும் நிஜமாயிருக்கிறது. இன்னொருவருடைய குறைபாடுகளை அதிகமாக மன்னிக்கப்பட வேண்டிய நிலையிலுள்ள பெலவீன மனிதர்களாகிய நாம் ஏன்

பெரிது படுத்தவேண்டும்?

தேவன் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறார் என்பதை இயேசு மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நாம் நன்மை செய்யாவிடில் (தயவாயில்லாவிடில்) தேவனுக்கு ஊழியம் செய்வதாகத் தவறாக எண்ணம் கொள்கிறோம். சில சமயங்களில் துரோகிகளை உபத்திரவப் படுத்துவதன் மூலம் தேவனுடைய சத்தியக் கொடியைப் பிடிக்கிறோம். அவர்களுடைய பொல்லாப்பில், துரோகத்தில் நாம் திட்டமாகப் பங்குகொள்ளப் போவதில்லை தான். ஆனால் அவர்கள் பொல்லாப்பில் நாம் பங்கு கொள்ளாமலேயே, அவர்களிடம் தயவாய் (கனிவாய்) இருக்க வேண்டுமென்பதை இயேசு இதைவிடத் தெளிவாகக் கூறியிருக்க முடியாது. “ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறது போல நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்”.

நாம் எந்த அளவிற்கு பிறருக்கு இரக்கம் காட்டியிருக்கிறோமோ அந்த அளவிற்கு நாம் இரக்கம் பெறப் போகிறோம் என கிறிஸ்து நமக்குப் போதித்திருக்கிறார். அடுத்தமுறை இன்னொருவர் மீது நாம் குற்றஞ்சாட்டும் விரலை நீட்டும்படி சோதிக்கப்படும் பொழுது இந்த எண்ணம் நம் மனதில் அதிகமாக ஆதிக்கம் செலுத்தவேண்டும். அப்படியென்றால் நாம் தவறான செய்கையை அல்லது தவறான கோட்பாட்டைக் கண்டுங்காணாமல் விட்டு விடுகிறோம் என்பது அர்த்தமல்ல. இந்த இரண்டையும் (தவறான செய்கை மற்றும் கோட்பாடு) இயேசு திட்டமாகச் செய்யவில்லையென்றாலும், பாவியினிடத்தில் அவர் இரக்கமுள்ளவராயிருந்தார். ''சுகமுள்ளவர்களுக்கு வைத்தியன் வேண்டியதில்லை'' என்பதை அவர் சுயநீதியுள்ள பரிசேயர்களுக்கு நினைவூட்டினார். துக்ககமான விஷயம் என்னவென்றால் பரிசேய பக்தி இன்னும் சாகவில்லை உயிரோடு தானிருக்கிறது. தவறான கொள்கை அல்லது கோட்பாடுகளுடன் எவ்வளவு வைராக்கியமாகப் போராடுகிறோமோ, அதே அளவு வைராக்கியத்துடனும் இந்தப் பரிசேய பக்தியோடு போராட வேண்டும். இயேசு அப்படிச் செய்தார். அந்தப் பெண்ணின் தவறை யாரும் மறுக்கவில்லை. இயேசு அவளை மன்னிக்கச் சித்தமுள்ளவராயிருந்தார். மற்றவர்களோ நியாயம் கேட்டார்கள். நாம் மட்டும் இயேசுவால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு நமக்கு இரக்கம் தேவைப்படுவது போலவே நம் சகோதரர்களுக்கு இரக்கம் காட்டினார். சகோதரன் பற்றி நாம் சாதிக்கும் எல்லாப் பிரச்சனைகளுமே நீங்கிப்போகும். நியாயத்தீர்ப்பின் சிங்காசனத்தின் முன் நிற்கும்போது, பிறரை முழுவதுமாக மன்னித்தவர்கள் மட்டுமே கிறிஸ்துவின் மன்னிப்பைப் பெறுவார்கள்'' பரிசுத்தமானவர்கள் தான் நீதி வேண்டும் என்கிறார்கள். (நமக்கோ மன்னிப்பு வேண்டும் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நாம் நன்மை செய்வோமாக. ஏனெனில் தேவன் அப்படித்தான் இருக்கிறார்.” உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல நீங்களும் இரக்கமுள்ளவராயிருங்கள்.



# கல்லுகள் கூப்பிடும்

“அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக. இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்றார் (லூக்கா 19:40).

டேவிட் பர்ஜஸ் என்பவர் வேதாகமத்தின் சரித்திரபிரகாரமான நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துகின்ற புனித நாட்டில் நடைபெற்ற சமீபகால அகழ்வாராய்ச்சி கண்டுபிடிப்புகளின் சிறப்பு அம்சங்களை கோடிட்டுக் காட்டுகிறார்.

## உண்மையா? அல்லது கற்பனையா?

நாம் உச்சரிப்பதற்கு எளிதற்றது என்று சொல்லப்படுகின்ற, அநேக ஏராளமான மக்களின் பெயர்கள் வேதாகமத்தில் உள்ளடங்கி உள்ளது. பட்டியல் அல்லது வம்ச வரலாறுகளின் (குடும்ப மரங்கள்) அமைப்பில் இப்பெயர்கள் அடிக்கடி வருகின்றன. தேவனுடைய வார்த்தையானது மக்களின் பெயர்களில் பெரும்பாலானவை மிக முக்கியமற்று இருந்தபோதும் அவைகளை பதிவு செய்துவைக்கும் அளவுக்கு ஏன் மிகவும் அக்கறைப்பட்டிருக்க வேண்டும் என்று நாம் வியப்படையலாம். ஆனால் அதற்குபதிலாக, வேதாகமமானது சும்மா கற்பனைதான் அல்லது கட்டுக்கதைதான் என்று மதநம்பிக்கையற்றவர்கள் கூறுவது சரி என்றால், இதை ஆக்கியோன் ஏராளமான பெயர்களைப் புதிதாகக் கண்டு பிடித்து எழுத தொல்லைப்பட்டிருக்க வேண்டும் என்ற நியாயமான கேள்வியை நாம் கேட்க முடியுமல்லவா?

## வருங்கால சந்ததிக்காக பதிவேடுகள்

உண்மையில் வெகு சில வேதாகம பாத்திரங்களே தனிப்பட்ட முத்திரை வடிவத்தில் இவர்கள் உண்மையாகவே வாழ்ந்தார்கள் என்று ஆதாரமின்றி தன்னிச்சையாக விடப்பட்டிருக்கின்றன. பழைய ஏற்பாட்டு காலங்களில் முக்கியமான நிருபங்கள் அல்லது ஆவணங்கள், உண்மையென உறுதி கூறும் வகையில் உள்ளன என குறிப்பிடுவதற்கு முத்திரைகள் பயன்படுத்தப்பட்டன. ஆவணத்தை கட்டிய நூலில் அந்த உரிமையாளரின் பெயரானது ஈரமான களி, மண்ணில் பதிக்கப்பட்டு முத்திரை, முத்திரை போடப்படும் ஒரு கணிமண் முத்திரை ஒரு பத்திரத்தில் பொறிக்கப்பட்ட ஒரு முத்திரை என்றும் அழைக்கப்படும். அப்படிப்பட்ட நூற்றுக்கணக்கானவைகளும் அதோடுகூட சிறிய எண்ணிக்கையில் முத்திரைகளுக்குள் முத்திரைகளுள்ளவைகளும் இஸ்ரவேலில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. 1980இல் தாவீதின் நகரத்தில் தோண்டப்பட்ட வேளையில் ஒரு அறையில் சேகரித்து வைக்கப்பட்ட 51 களிமண் முத்திரைகளை தீயினால் சேதப்படுத்தப்பட்ட நிலையில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவை ஏறக்குறைய எருசலேமானது பாபிலோனியரால் கி.மு. 586இல் வெற்றி கொண்டபோது ஏற்பட்டதாக இருக்கலாம்.

ஒரு வேதாகம பாத்திரத்தை குறிப்பிடுகின்ற இந்த அழகிய முத்திரையானது ஒரு தனிநபர் சேகரித்து வைத்திருந்ததில் 1996 இல் அடையாளங் கண்டு கொள்ளப்பட்டது.

எகிப்திய மாதிரியில்

செதுக்கப்பட்ட முத்திரையும்

முத்திரை மோதிரமும் - ஓசியா ராஜாவின்

அமைச்சருக்குரியது *(2. இராஜா 17:1-6)*

இம்முத்திரையானது சுமார் ஒரு அங்குல உயரமுடையது. ஆரஞ்சு நிற சந்திர காந்தக் கல்லில் எகிப்திய மாதிரியில் செதுக்கப்பட்டு ஒரு முத்திரை மோதிரத்தில் பதிக்கப்பட்டிருந்தது. அதில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் கண்ணாடி பிம்பத்தில் களிமண் மீது சரியான வடிவில் பதிக்கப்பட்டுவரும்படி செதுக்கப்பட்டிருந்தன.

'ஓசியாவின் பணியாளனாகிய அப்திக்கு உரியது' என்று அவைகளை வாசிக்கலாம். ஒபதியா என்று வேதாகம பெயரின் ஒரு சுருக்க வடிவம் தான் அப்தியாக இருக்கிறது. அதே வேளையில் அவரது பட்டப்பெயரான 'பணியாளன்' என்று உண்மையில் அவர் ஒரு அரசாங்கத்தின் அமைச்சர் என்று பொருள்படுகிறது. அவருடைய எஜமானன் ஓசியா என்பவர் வடக்கு இராஜ்யமாகிய இஸ்ரவேலின் கடைசி ராஜாவும் (கி.மு. 732-723) குறிப்பாக எகிப்து நாட்டோடு சேர்ந்து சதி ஆலோசனை பண்ணியதால் அசீரியர்களால் நாடு கடத்தப்பட்டவருமாயிருக்கிறார் *(2. இராஜா 17:1-6).*

## அரசனுக்குரிய முத்திரைகள்

கடந்த ஐந்து வருடங்களில் அடையாளங்காணப்பட்டவைகளில் மிக பரவசமூட்டுவதாக இருக்கின்ற இரண்டு பழைய ஏற்பாட்டிலுள்ள யூதா தேசத்தின் ராஜாக்களுடையது.

முதலாவதாக, விக்கிரக வழிபாடு செய்தவனாகிய ஆகாஸ் ராஜாவின் பெயரைத் தாங்கிய ஒரு முத்திரைப் பதிப்பானது கண்டு பிடிக்கப்பட்டது. அவரது சரித்திரமானது 2 இராஜாக்கள் 16ஆம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. பிறகு தனியாரின் சேகரிப்புகளிலிருந்து, ஒரு முத்திரை தொகுப்பானது வேதாகமத்திலுள்ள பெரிய விசுவாச மனிதர்களில் ஒருவனுக்குரியது என்று அடையாளங்கண்டு பிடிக்கப்பட்டது.

வட இராஜ்ஜியமானது வீழ்ச்சியடைந்து சுமார் எட்டு வருடங்களுக்குப் பிறகு அசீரியா ராஜாவாகிய சனகெரிப்பின் பயங்கரமான படையெடுப்பைச் சந்திக்க வேண்டிய ராஜாவாக ஆகாஸின் மகன் எசேக்கியா இருந்தான். அந்த அசீரியாவின் இராணுவமானது எருசலேம் மட்டும் மிஞ்சி இருக்கும்வரை யூதாவின் பாதுகாக்கப்பட்ட பட்டணங்களைக் கைப்பற்றியது. ஆனால் 2. இராஜாக்கள் 19ஆம் அதிகாரத்திலும் ஏசாயா 37ஆம் அதிகாரத்திலும் விவரிக்கப்பட்டபடியே தேவன் மீது கொண்டிருந்த எசேக்கியாவின் நம்பிக்கையின் மூலமாக எருசலேம் நகரமானது எதிராளி படையெடுத்து வந்ததால் ஏற்பட இருந்த அழிவிலிருந்து அற்புதமாக விடுவிக்கப்பட்டது. அவற்றினுள் இரு முத்திரைகள் பழங்கால எகிப்தியர்கள் புனிதமாகக் கருதிய வண்டுகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மூன்றாம் முத்திரையானது (கீழே எடுத்துக் காட்டியபடி) இறக்கை உடைய ஒரு



சூரியனை உடையதாக இருந்தது.

*"யூதா ராஜாவாகிய ஆகாஸின் மகன்*

*எசேக்கியாவுக்கு உரியது என்று*

*பொறிக்கப்பட்ட களிமண் முத்திரை"* (2. இராஜா 18:1)

வேதாகமத்திலுள்ள மக்களின் உண்மையான வாழ்க்கையானது தொலைதூரமான இந்நாட்களில் உறுதிப்படுத்துதலைக் காண்பது எவ்வளவு ஊக்கமூட்டுவதாகவும் கிளர்ச்சியூட்டுவதாக இருக்கிறது. வேதாகமப் பெயர்களின் முக்கியமானது, சரித்திரம் முழுவதிலும் உங்களையும் என்னையும் போன்ற நிஜமனிதர்களின் மீது தேவன் அக்கறைக் கொண்டவராக இருக்கிறார் என்பதையே அவைகள் காண்பிக்கின்றன. வேதாகமத்திலுள்ள இரட்சிப்பின் செய்தியில் உங்களுக்கு நம்பிக்கை இருக்குமானால் நமது பெயர்களும் கூட தேவனுடைய ஜீவபுத்தகத்தில் சேர்க்கப்படும்.

**டேவிட் பாஜஸ்**

**எடுத்துக்காட்டுகள் - டேவிட் வில்லி**

---

# வாழ்க்கைக்காக் கல்வி கற்கிறோமா?

**பால் பில்லிங்கற்றன் பிரிட்டிஷ் கொலம்பியா**



இப்பொழுது போல் என்றுமே கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதில்லை. வடஅமெரிக்காவில் கல்வியானது செழித்தோங்கும் ஒரு தொழிலாகிவிட்டது. வாழ்க்கையில் பெற வேண்டிய எல்லா நல்ல காரியங்களையும் தருவதாக வாக்களித்து, கல்வி தன்னையே விலை பேசுகிறது. பட்டப்படிப்பு, வீடு, கார், இவையெல்லாவற்றையும் கையில் ஏந்தியவாறு ஒரு படம் வரைந்து, விளம்பரம் செய்வதன் மூலம் ஒரு வணிக நிறுவனம் தன் வாடிக்கையாளர்களாக மாணவர்களைக் கவர்கிறது. 50 விதமான படிப்புகளைத் தருவதாக விளம்பரத் தாள் கூறுகிறது. "ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் எங்களுக்குத் தாருங்கள். அப்பொழுது நீங்கள் எதை விரும்புகிறீர்களோ அதைப் பெற்றுக் கொள்வது எப்படி என நாங்கள் உங்களுக்குக் காட்டுவோம்" என்கிறார்கள்.

ஆனால் ஒரு உண்மையான மேன்மையான வாழ்விற்கு இது தான் வழியா? ஒரு மனிதன் வைத்திருக்கக் கூடிய ஏராளமான பொருள்கள் தான் மேன்மையான வாழ்வைக் குறிப்பதாகும் என மேற்கூறிய விளம்பரம் சுட்டிகாட்டுகிறது. அநேக மக்களுக்கும் அதே காட்சி தான் நிஜம் போல் தோன்றுகிறது. ஆனால் உண்மையில்

அப்படித்தான் இருக்கிறதா என நாம் நின்று நிதானமாக சிந்திக்க வேண்டும். நாசரேத் ஊரைச் சேர்ந்த இயேசுவின் வார்த்தைகளிலுள்ள கருத்தைக் கவனியுங்கள்.

''பின்பு அவர் அவர்களை நோக்கி: பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு........?

### வாழ்க்கையின் நிச்சயமில்லாமை

வாழ்க்கை எப்படி இருக்கக் கூடும் அல்லது எப்படி இருக்கவேண்டும் என்பது பற்றிய நமது மதிப்பீடுகளில் சரியான உண்மைகளைச் சேர்த்துக் கொள்வது தேவையற்ற சோகத்தைத் தருவதாகாது. நீடித்த வாழ்க்கை அல்லது குறுகிய வாழ்க்கை என்பது அளவிடப்படக்கூடிய ஒன்று. வங்கியில் பெருந்தொகை சேமிப்பிலுள்ளது, ஆரோக்கியமான மனிதன், புத்தம் புது கார் வீட்டிற்கு வருகிறது, புதிதாய் கட்டப்பட்ட வீடு குடியேற ஆயத்தமாயுள்ளது. ஆனால் அவன் வாழ்வதற்கு ஒரே ஒரு மாதம் தான் இருக்கிறது. இவையெல்லாமே அளவிடப்படக்கூடியவை தாம். இயேசு தம் கருத்தை, அதாவது ஒரு மனிதனின் வாழ்க்கை அவன் கொண்டுள்ள ஏராளமான பொருள்களைப் (செல்வம்) பொறுத்ததல்ல எனும் கருத்தை ஒரு உவமையின் மூலம் வலியுறுத்திக் கூறினார். முடிவாக "ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகளாயிருக்கிறது" என்று கூறுகிறார் *(லூக்கா 12:23).*

### ஒரு மேன்மையான வாழ்வு

ஒரு அடிப்படையான விஷயம் என்னவென்றால் நாம் உயிரோடுள்ளோம் என்ற உணர்வு தான். மனித மனமோ இதை அலட்சியப்படுத்தும் விநோத ஆற்றல் பெற்றிருப்பதோடு, அட்டைகளால் வீடு கட்டி, நொடிப் பொழுதில் விழுந்து விடும் அந்த வீட்டிற்காக தன் சக்தியனைத்தையும் செலவழிக்கிறது. தூக்கிலிடப்படப்போகும் குற்றவாளி அந்த நாளில் காலைப் பொழுதில் அடுத்த வாரத்திற்குத் தேவைப்படும் மளிகைப் பொருள்களைப் பற்றியோ, தன் செருப்பு இன்னும் எவ்வளவு காலம் உழைக்கும் என்பதைப் பற்றியோ கவலைப்பட மாட்டான். கடைசி நிமிடம் வரை, தன் மரணதண்டனைக்கு தடையுத்தரவு வருமா, விடுதலை கிடைக்குமா என்று தான் எண்ணுவான். அந்தக் கருத்தைத்தான் இயேசு லூக்கா 12:23ல் தெளிவுபடுத்தினார். மளிகை சாமான்களும் ஒரு ஜோடி செருப்புகளும் மட்டுமே வாழ்க்கையாகாது. *மத்தேயு 4:4ல்* அவர் *உபாகமம் 8:3ஐ* மேற்கோள் காட்டி இக்கருத்தை இன்னும் அழுத்திக் கூறுகிறார். "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்".

சிலர் தங்களுக்கு பெலன் தரும் அப்பம் இல்லாவிடில் மரிக்கவேண்டிய தாகுமே என வாதாடுகிறார்கள். அதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறார்கள். நமக்கு உணவு தேவையில்லை என வேதம் போதிக்கிறதில்லை. (சொல்லப்போனால் - அதன் அவசியத்தை உணர்த்துகிறது. *லூக்கா 12:30ஐக்* காண்க. வேதம் சொல்வதென்னவென்றால் : மனிதன் அப்பத்தினாலே மாத்திரம்



பிழைப்பதில்லை - உணவு, உடை, புது கார்கள், புதிய வீடுகள், பெரிய சொத்துக்கள் என்பவற்றிற்கும் மேலான அர்த்தம் உடையது வாழ்க்கை. கல்வி எனும் தொழில் வாக்குப் பண்ணியிருப்பவைகளைக் காட்டிலும் ஒரு மேன்மையான வாழ்க்கை இருக்கிறது. இந்த மேன்மையான வாழ்க்கையின் பல பலன்களைப் பற்றி நவீன உலகிற்கு ஒன்றும் தெரியாது. அவ்வாழ்க்கையை விரும்புவதும் இல்லை - சமுதாயம் எதை இழந்து கொண்டிருக்கிறது என்பது சமுதாயத்திற்குத்தெரியாது.

### தேவனுடைய ஜீவன்

*எபேசியர் 4:17,18ல்* அவிசுவாசிகளான புறஜாதியாரைப் பற்றி ''மற்றப் புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறது போல நீங்கள் இனி நடவாமலிருங்கள். அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து" எனக் கூறுகிறார்.

ஆவியிலே ஏவப்பட்டு அவர் வீணான சிந்தை (அதாவது வெறுமை) புத்தியில் அந்தகாரப்படுதல், அறியாமை என்று எழுதியிருப்பதை நாம் கவனிக்காமல் இருக்க முடியாது இந்த வசனங்கள் புத்தி தெளிந்து, கல்வியறிவு பெற வேண்டியதன் அவசியத்தைக் கூறுகின்றன. போதனை எந்தக் குறிப்பிட்டு காரியத்திற்கு வேண்டுமென அப்போஸ்தலர் கூறுகிறார் என்று பார்த்தால் - 'தேவனுடைய ஜீவனுக்கு' என்கிறார். இதைப் பற்றிய அறியாமை உலகில் அதிகம் என்றும் இந்த அறியாமை தான் மக்கள் தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராய் இருக்கக்காரணம் என்றும் அறிகிறோம். அப்படியானால் இந்த மேன்மையான ஜீவியத்தில் என்ன இருக்கிறது.


அப்போஸ்தலனாகிய யோவான் தன் முதல் நிருபத்தில் *(அதிகாரம் 1 வசனம் 2)* இந்த ஜீவனைப் பற்றிக் குறிப்பிடுகிறார். "அந்த ஜீவன் வெளிப்பட்டது. பிதாவினிடத்திலிருந்தும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக் குறித்துச் சாட்சி கொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம்".

ஆகவே, இந்த ஜீவன் "நித்தியமானது" அதனோடு சேர்ந்த எந்த ஒரு நன்மையும் அட்டைவீடு அழிந்து கீழே விழாது. என்றென்றும் நிலைத்து நிற்கும் தன்மை உண்டு என உறுதி கூறப்படுகிறது. லூக்கா 12ல் இயேசு, "அழியாத பொக்கிஷத்தை" பற்றிப் பேசுகிறார்.

### இதுவே நித்திய ஜீவன்

ஒருவருடைய வாழ்க்கை பற்றி நாம் கற்க விரும்பினால் அவரை நெருங்கி அவரைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும். தேவனுடைய ஜீவனைப் பற்றிய காரியத்திலும் இதே விதி தான் கடைப்பிடிக்க வேண்டும். *யோவான் 17:3ல்* இயேசு "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவரான இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்," என்கிறார். அப்படியென்றால், மகத்தான, எல்லாம் வல்ல சிருஷ்டிகராகிய தேவனை நாம் எப்படி அறிந்து கொள்ளக் கூடும்?

இந்த அதிமுக்கிமான கேள்வி மோசேயின் மனதை ஆக்கிரமித்துக் கொண்டது. தேவனை அறிந்துக்கொள்ள வேண்டுமானால், அவருடைய வழிகளைப்




பற்றிய அறிவு வேண்டும், என்ற உணர்வைப் பெற்றான். *யாத்திராகமம்* 33:13ல் மோசே கர்த்தரிடம் கூறியதாவது ''உம்முடைய கண்களில் இப்பொழுது எனக்குக் கிருபை கிடைத்ததானால் உம்மை அறிவதற்கு... உம்முடைய வழியை எனக்கு அறிவியும்".

"உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்தால்'' தேவன் தமது சிநேகிதர்களை அவரே தெரிந்து கொள்கிறார் (வ.19). என்பதை மோசே அறிக்கைச் செய்கிறான். இதை மனதில் கொண்டு, தேவனை அறிவதற்கு அவருடைய வழியைத் தனக்குக் காட்டும்படி கேட்கிறான்.

இந்த விதமாகத் தான் மோசே தேவனை அறிந்து கொண்டாரென்றால், நாம் அவரை அறிய விரும்பினால், நமக்கும் அதேதான் வழி, அதாவது அவருடைய வழிகளை நன்கு அறிந்து கொள்வது (பரிச்சயப்படுத்திக்கொள்வது) *யாத்திராகமம் 33ல்* மோசே பயன்படுத்தும் வார்த்தைகளைக் கவனிப்பது நமக்கு நல்ல போதனையாக இருக்கும்.

வசனம் 13 "உம்முடைய வழியை எனக்கு அறிவியும்".

வசனம் 18 "உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும்".

இதற்குப் பதிலளிக்கும் வகையில் தேவன் மோசேயிடம் என்னுடைய தயையை எல்லாம் நான் உனக்கு முன்பாகக்கடந்து போகப் பண்ணி.... என்றார். மோசேயின் வேண்டுதல்களையும், தேவன் அளித்த பதில்களையும் நாம் கவனித்தால், தேவனுடைய வழிகள் அவருடைய மகிமையாயிருக்கின்றன. இது அவருடைய தயையைக் குறிக்கிறது எனக் கற்றுக்கொள்கிறோம். மேலும் இவையெல்லாம் - அவருடைய வழிகள், அவருடைய மகிமை மற்றும் அவருடைய தயை - இவை எல்லாம் சேர்ந்து அவருடைய "நாமம்" என்றாகிறது.

## தேவனுடைய நாமம்

நாமம் எனும் வார்த்தை எபிரேய மொழியில் 'ஷேம்' என்றிருக்கிறது. அதன் பொருள் "புகழ்வாய்ந்த" என்றுள்ளது. வேதாகமத்தில், மனிதர்களின் பெயர்கள் மற்றும் இடங்களின் பெயர்கள், அந்த மனிதரைப் பற்றியும் இடத்தைப் பற்றியும் அவர் தமது வழிகளை மோசேக்கும் தமது கிரியைகளை இஸ்ரவேல் புத்திரருக்கும் தெரியப்பண்ணினார். கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர் *(சங்கீதம் 103:7,8)* தேவனுடைய வழிகள் மற்றும் இஸ்ரவேலரோடு அவர் செய்த கிரியைகள் வேதாகமத்தில் நன்கு தெளிவாய் எழுதப்பட்டுள்ளன.



இவைகளின் மூலம் வரக்கூடிய சந்தர்ப்ப சூழ்நிலைகளில் தேவன் எவ்விதம் செயல் படுகிறார். வேதத்தில் காணப்படும் கொள்கைகளைப் பயன்படுத்துவது சாத்தியம் என்று காணலாம். ஆனால் நாம் புதிய ஏற்பாட்டுக் காலத்திற்கு வரும்போது, தேவனை இன்னும் நெருங்கிய அளவில் அறிந்து கொள்ளும் சிலாக்கியம் நமக்குக் கொடுக்கப்படுகிறது.

*அப்போஸ்தலர் 18:24ல்* அப்பொல்லோ எனும் பெயருடைய யூதன் ஒருவன் நமக்கு அறிமுகமாகிறான். ''அவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டவன் (வ.25) என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே நாம் இதுவரை சிந்தித்து வந்த காரியங்களில் அப்பொல்லோ உபதேசிக்கப்பட்டான் அல்லது போதிக்கப்பட்டான். அவன் கர்த்தருடைய வழிகளை வேதத்தில் வெளிப்படுத்தப்பட்ட படியே புரிந்து கொண்டான். அவன் 'வேதாகமங்களில் வல்லவன்' (பழைய ஏற்பாட்டில் தான் இருக்கமுடியும்).

நம் நவீனக் கல்வித் தொழிலகங்கள் தராத ஒரு போதனை முறையை இங்கே காண்கிறோம். கர்த்தருடைய வழி (மார்க்கம்) என்பது வேலை வாய்ப்பு பயிலகங்களுக்குத் தெரியாத ஒன்று. அவர்கள் கர்த்தருடைய நினைவுகளை அறியார்கள் அவருடைய ஆலோசனையை அறிந்து கொள்ளவுமில்லை. காரியம் இப்படி இருப்பதால், மேன்மையான வழியை அவர்கள் அறியாததாலும், புகையைப் போல் ஒரு ராத்திரியிலே ஒழிந்துபோகிற உலகத்திற்கடுத்த பலன்களையே தரக்கூடும். எப்படியும் வாழ்க்கையின் முடிவில் அவர்கள் பின் விடப்படுவார்கள் என்பது திண்ணம். இப்படி "அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதயக் கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராகிறார்கள்" *(எபிசியர் 4:18)* தங்கள் வாடிக்கையாளர்களுக்கு எவ்வளவு மோசமான பலன்களைத் தருகிறார்கள். தேவனுடைய வார்த்தை நமக்கு சத்தியத்தைப் போதிக்கிறது "ஐசுவரியவானாக வேண்டுமென்று பிரயாசப்படாதே. சுயபுத்தியைச் சாராதே. இல்லாமற் போகும் பொருள்கள்மேல் உன் கண்களைப் பறக்கவிடுவானேன்? அது கழுகைப் போல் சிறகுகளைத் தனக்கு உண்டு பண்ணிக் கொண்டு, ஆகாயமார்க்கமாய்ப் பறந்துபோம்" *(நீதிமொழிகள் 23:4,5).*

அப்பொல்லோ உலகப்பொருள் சார்ந்த தத்துவப் பள்ளியில் பயிலவில்லை,தேவனைப் பற்றிய அறிவில் தேறினவனும், கர்த்தருடைய வழிகளை விளக்கிக் கூறும் பேச்சாற்றல் படைத்தவனுமாயிருந்தான். அவன் "கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம் பண்ணிக்கொண்டு வந்தான்".

## நம் கல்வியை நிறைவு செய்வது

ஆனால், அப்பொல்லோவின் அறிவு முற்று முடிய பெற்ற அறிவு அல்ல. தேவனைப் பற்றி நெருங்கிய, பரிபூரணமான அறிவு இன்னும் அவனுக்கு அறிமுகப் படுத்தப்படவில்லை. ஆகவே ஆக்கில்லா, பிரிஸ்கில்லா என்ற இரண்டு சீஷர்கள் "அவர்களைச் சேர்த்துக்கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிகத் திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்'' *(அப். 18:26).* இதன் பயனாய் கர்த்தருடைய மார்க்கத்தில் மேலான கல்வி பெற்றவனாகிய, அப்பொல்லோ இயேசுவே கிறிஸ்து என்று வேத வாக்கியங்களின்படி திருஷ்டாந்தப் படுத்தினான். இப்போது தேவனுடைய வழியைக் குறித்த கோட்பாட்டையும் நோக்கத்தையும்

அறிந்தவன் மட்டுமல்ல, இது, நாசரேத்தைச் சேர்ந்த இயேசுவாகிய மேசியாவில் நிறைவேறியது என்பதைக் காணும் நிலைக்குக் கொண்டுவரப்பட்டான். இது பிதாவையும் குமாரனையும் அறிவதை உள்ளடக்கியது. ''ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்" *(யோவான் 17:3).*

**நாங்கள் அவருடைய மகிமையைக் கண்டோம்.**

தேவன் மோசேக்குக் காட்டிய தேவனுடைய வழிகள், அவருடைய மகிமை மற்றும் தயை இவையெல்லாம் பழைய ஏற்பாட்டின் நிஜங்கள். "சகல பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர்" *(சங்கீதம் 138:2)* மெய்தான். தேவனுடைய வார்த்தை தான் மாபெரும் சிருஷ்டிகரின் மனதையும் எண்ணங்களையும் மனிதருக்கு வெளிப்படுத்தியது. இங்கு மட்டுமே வேதவாக்கியங்களில், தேவனுடைய வழிகள் போதித்தல் பற்றிக் காண்கிறோம். ஆனால் தேவன் தமது மாபெரும் தயை மற்றும் இரக்கத்தினால் நமக்கு அவருடைய மகிமையைப் பற்றிய ஒரு ஜீவனுள்ள முன்மாதிரியை அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவில் கொடுத்திருக்கிறார்.

"அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" *(யோவான் 1:14).*

ஆகவே, மகாமேன்மையானவரும், மாம்ச கண்களுக்கும் புலப்படாதவருமான தேவனின் குணாதிசயங்களையும் 'மகிமையையும்' வெளிப்படுத்தினார். அவர் சொன்னது போல் "நான் என் பிதாவின் நாமத்திலே வந்திருந்தும்" (யோவான் 5:43)

(ஜெபத்தின் ஒரு பகுதியாக) அவர் "நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன்" என ஜெபித்தார். (யோவான் 17:6)

ஆண்டவருடைய மகிமையைக் காணக்கிடைத்திருப்பது என்ன ஒரு ஆசீர்வாதம், என்ன ஒரு சிலாக்கியம்! நீதியின் மாபெரும் போதகரின் பிரசன்னத்தில் இருந்து கொண்டு ''அவருடைய வாயிலிருந்து புறப்படும் கிருபையுள்ள வார்த்தைகளைக் கேட்டு ஆச்சரியப்படுவதும் எத்தனை அருமையான போதனை! *(லூக்கா 4:22 சங்கீதம் 45:22 ஐயும் காண்க).* இருப்பினும், எவ்வளவு குறைவான எண்ணிக்கையிலுள்ள மனிதர்கள், அவர்கள் காணக்கூடியதும் கேட்கக் கூடியதுமானதும், அவர்களுக்குமுன் வெளிப்படுத்தப்பட்டதுமான மகிமையை விலைமதித்தார்கள்! அவர்கள் மதிக்கவில்லை என்பது தான் பதில். தீர்க்கதரிசி கண்டபடி," ".... அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை; அவரைப் பார்க்கும் போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது. அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்...." (ஏசாயா 53:2,3). மனிதனான இயேசு எப்படியிருந்தார்! அதே காலத்து மக்கள் அவரிடம் எப்படி நடந்துகொண்டார்களென்றும் இது விவரிக்கிறது. இருப்பினும், சிலருக்கு 'திரைக்குப் பின்னால்' அதாவது அவரின் மாம்ச சரீரத்திற்குப் பின்னால், இருப்பதைக்



காணக்கூடிய அளவிற்கு விசுவாசம் இருந்தது. ஆகவே "நாங்கள் அவருடைய மகிமையைக் கண்டோம்!'' என அறிவித்தார்கள். கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்த ஒருவரின் குணாதிசயத்தைக் கண்டார்கள். யோவான் கூறுகிறான்:

''ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப் பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவ வார்த்தையைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம். அந்த ஜீவன் வெளிப்பட்டது; பிதாவினிடத்திலிருந்ததும் எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக் குறித்து சாட்சி கொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம்." (1 யோவான் 1:1,2)

**விலையேறப் பெற்ற பொக்கிஷம்**

ஆகவே, அப்போஸ்தலர்கள் தாங்கள் கண்டதைக் குறித்து புதிய ஏற்பாட்டை எழுதி அறிக்கை செய்தார்கள். 'இவர்களுடைய வார்த்தையினால்' (யோவான் 17:20) இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களும் இருக்கிறார்கள். இந்த விசுவாசிகளும் மோசேக்குக் காட்டப்பட்ட வழிகள், மகிமை, தயை மற்றும் நாமம் இயேசுகிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்டது என்பதை உணரக்கூடியவர்களாயிருப்பார்கள். பவுல் இதை 2 கொரிந்தியர் 4:6ல் விளக்குகிறார்.

"இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும் பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார். இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்" *(2 கொரிந்தியர் 4:6).*

இரத்தினங்களையும் தங்கத்தையும் விட மிக மிக விலைஉயர்ந்த ஒரு பொக்கிஷம், இப்பொழுது, இங்கே மண்பாண்டங்களில் இருந்தாலும் முடிவில்லா வாழ்வு உண்டு என்ற வாக்குத்தத்தம் அதற்கு இருக்கிறது.

**மனம் மறுரூபமாகுதல்**

புதிய ஏற்பாடு எழுதப்பட்டு, தொகுக்கப்பட்டதன் பின் வந்த நூற்றாண்டுகளில், ஒரே மெய்யான தேவனையும் அவருடைய குமாரன் இயேசு கிறிஸ்துவையும் எழுதப்பட்டுப் பாதுகாக்கப்பட்ட வார்த்தையின் மூலமாக அறிந்துகொண்டார்கள். ஏதோ மேலெழுந்தவாரியாக வேதத்தை ஆழமற்ற முறையில் வாசிப்பது அல்ல. பரலோகத்திலிருந்து தரப்பட்ட கருத்துக்கள், எண்ணங்கள் மற்றும் கோட்பாடுகளை மனது உள்வாங்கத் தக்கதாகக் கவனமுடன் முயற்சி எடுத்துப் படிப்பது அவசியமாகிறது. *(எரேமியா 23:18-22; 2 தீமோத்தேயு 2:15)* வார்த்தையும் இதையே நமக்குப் போதிக்கிறது. நம் மனதுக்குத் தகவல்களைக் கொடுப்பது என்பதல்ல. அவைகளைப் புசிப்பது, பேதுரு சொன்னது போல் ''நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்." (1 பேதுரு 2:3)

தேவனுடைய வார்த்தை (இரு ஏற்பாடுகளும் தான்) எழுதப்பட்டிருக்கும் விதம்,

நான் சரியான மனப்பான்மையோடு வாசித்து, தவறாமல் தியானம் செய்தால், அது தேவனுடைய வழிகளைப் பற்றிய அறிவுக்கும் பயபக்தியோடு அவரோடு பழகும் நிலைக்கும் நேராக நம்மை வழிநடத்தும், வரலாற்றிலும், அன்றாட நிகழ்ச்சிகளிலும் நம் சொந்த வாழ்க்கையிலும், அவருடைய வழிகள் மற்றும் கிரியைகளைப் புரிந்து கொள்ள உதவுகிறது. *(மேலும் 2 கொரிந்தியர் 3:18ன் வார்த்தைகளைப் பயன்படுத்தினால்..." நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறது போலக் கண்டு, ஆவியாயிருக்கிற (சத்தியத்தின் வார்த்தை) அந்தச் சாயலாகத் தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்").*

இங்கே முக்கியமான கருத்து என்னவெனில், நாமெல்லாருமே கர்த்தருடைய மகிமையின் சாயலாக மறுரூபமடையக் கூடும். நாம் தேவனுடைய காரியங்களில் போதிக்கப்பட்டு, நம் மனதுகள் மறுரூபமடைவதன் விளைவாகவே கர்த்தருடைய மகிமையின் சாயலாக மறுரூபமடைவோம். இதை முன்னிட்டுத்தான் நாம் கிரியை செய்யவேண்டுமென பவுல் அப்போஸ்தலன் நம்மைத் தூண்டிவிடுகிறார். "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்.... உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்'' *(ரோமர் 12:2).* ''உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி" *(எபேசியர் 4:23),* என்று நம்மைத் தூண்டுகிறார். யாக்கோபும் இதே கருத்தை மனதில் கொண்டவராக விசுவாசிகளை "சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார் என்கிறார் *(யாக்கோபு 1:18).* 21ம் வசனத்தில் இதே கருத்தை வலியுறுத்தி உங்கள் உள்ளத்திலே நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக் கொள்ளுங்கள்." (வ.21) எனக்கூறுகிறார்.

ஆகவே, தேவனுடைய வார்த்தை நமக்கு அவருடைய வழிகளை அல்லது அவருடைய குணாதிசயங்களை நமக்குப் போதிக்கிறது. இஸ்ரவேல் புத்திரரோடு அவருடைய தொடர்பு மற்றும் பல்வேறு தனி மனிதர்களிடம் அவரின் கிரியைகள் இவற்றின் மூலம் அவர் செயல்படுத்திய இந்த வழிகளைப் பார்க்கிறோம். மேலும் இக்கொள்கைகளைப் பரிபூரணமாக வாழ்ந்து காட்டிய கிறிஸ்து இயேசுவின் இந்த மகிமை வெளிப்பட்டதையும் காண்கிறோம். அறியாமையும் வீணான நடத்தையுள்ள நம்மேல் தேவனுடைய வார்த்தை ஆதிக்கம் செலுத்தி, அவற்றினின்று நம்மை மறுருபமாக்குவதால், நம் வாழ்கையில் தேவனுக்கு கனத்தைக் கொண்டு வர நாடும் நிலைக்குக் கொண்டுவரப்படுகிறோம். சுருங்கக் கூறின் நம்மை ஒரு மேன்மையான வாழ்க்கைக்கு நேராய் நடத்துகிறது - உலகம் தருவதாகத் தோன்றுகிற எந்த உலகப் பிரகாரமான நன்மைகளுக்கெல்லாம் மிக மிக மேலான ஒரு சிறப்பான பொக்கிஷத்துக்கு நேராய் நடத்துகிறது. நமக்கு 'மகிமையுள்ள வாடாத கிரீடத்தைத்' தருகிறது *(1. பேதுரு 5:4).*

### வாழ்க்கைக்காகக் கற்றுக்கொள்ளுதல்

இக்கட்டுரையின் எழுத்தாளன் வாழும் பகுதியிலுள்ள ஒரு கல்லூரி பயன்படுத்திய சொற்றொடரைத் தான் கட்டுரையின் தலைப்பாக வைக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் குறிப்பிட்ட 'வேலை வாய்ப்பு பயிலகம்' தரும் கல்வி உலகப் பிரகாரமான செல்வத்தைத் தேடும் 'வாழ்க்கை'யை



மேம்படுத்தினாலும், அதுவே நிச்சயமில்லாததும் தற்காலிகமானதும் தான். 'காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள்' (2கொரிந்தியர் 4:18) எனப்பவுல் கூறுகிறார். இந்நிறுவனங்கள் தற்காலிகமானவைகளைத் தான் தருகின்றன. சில சமயங்களில் அதைக்கூடத் தருவதில்லை. அநேகர் பலமணி நேரங்கள்- அநேக வருடங்கள் கூட கல்லூரி அல்லது பல்கலைக்கழகத்தில் செலவழித்தும், கடைசியில் அது வாக்குப் பண்ணியது பலிக்காமல் போகிறது. ஒன்று அங்கே வேலை வாய்ப்பு இல்லை அல்லது வேலை ஏற்ற வேலையாக இல்லை. சிலர் வாழ்க்கையெல்லாம் கற்றுக்கொண்டே இருக்கும்.

"வாழ்க்கைத் தொழில் மாணவனாய்" இருந்து எதிர்பார்த்த எந்த பலனும் கிடைக்காமல் இருக்கிறார்கள் "எப்போதும் கற்றாலும் ஒரு போதும் சத்தியத்தை அறிந்து உணராமல்" இருப்பதும் சாத்தியம் என வேதம் நமக்குப் போதிக்கிறது. கல்வியறிவில்லாத சமுதாயம் நம் மத்தியில் வளர்வதை யாரும் விரும்புவதில்லை. அதையும் விட விரும்பத் தகாதது எதுவென்றால் தேவனுடைய ஜீவனுக்கு மக்களை அந்நியராக்கும் அறியாமைதான். வாழ்க்கைக்காகக் கற்றுக் கொள்வதில் நமக்கு ஆர்வம் இருக்குமென்றால், மெய் வாழ்க்கை எதுவென அறிந்து அதை விரும்புவோமாக.

அப்போஸ்தலன் யோவான் சத்தியமாவது யாது எனக்கீழ்க்கண்ட வார்த்தைகளில் கூறுகிறார்.

"தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிற தென்பதே அந்தச் சாட்சியாம். குமாரனை உடையவன் ஜீவனை உடையவன். தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்" *(1யோவான் 5:11,12).*

நாம் உயிர்வாழ்வதின் முக்கியமான கற்கும் அனுபவம் கிறிஸ்துவின் வாழ்க்கை தான். இந்த வாழ்க்கை நாம் வாழக் கற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று தான் - பவுல் அப்போஸ்தலன் சொல்வது போல "கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படி" *(2கொரிந்தியர் 4:10,11)* நாம் ஏற்கனவே பார்த்தபடி, இந்த ஜீவன் கிருபையும் சத்தியமும் நிறைந்தது. இந்த ஜீவன்அல்லது வாழ்க்கை தேவனை கனம்பண்ணுகிறது. அவருடைய நாமத்தையும் குணாதிசயத்தையும் வெளிப்படுத்துகிறது. சத்தியத்திற்காகவும் பிறருக்காகவும் மனதார தன்னை (ஜீவனை) கொடுக்கிறது. இப்படிப்பட்ட காரியங்களை மாம்சமும் ரத்தமும் எளிதில் செய்ய முன்வராது. ஆனால் இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் தனியே இல்லை. பெலவீனனையும் பிடித்து நிற்கச் செய்யக் கூடும். ஏனெனில் "பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" *(2 கொரிந்தியர் 12:9)* என எழுதப்பட்டிருக்கிறது *(ரோமர் 14:1-14).*

நாம் வாழ்க்கைக்காக, மெய்யாகவே ஒரு மேன்மையான வாழ்க்கைக்காகக் கற்க விரும்பினால், தேவபக்தியை ஏன் நாடக்கூடாது. அது, "இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது" *(1தீமோத்தேயு 4:8).*

நம் மதிப்பீடுகளை நேராக்கிக் கொள்வதில் ஆரம்பிக்கிறோம். நீடித்து நிற்கக்கூடியதும், பயனுள்ளதுமான எதிர்காலத்தைத் தரக்கூடிய கல்வியைத் தெரிந்து கொள்ளும் நிலைக்கு அப்போது தான் வருவோம்.

# "தேவனிடம் திரும்புதல்"

வேகமாக ஓடும் ஆற்றில் திறமையான படகோட்டி தன் திறமையைப் பயன்படுத்த நல்ல வாய்ப்புகிடைக்கிறது. போட்டியாளனான வீரன் ஒருவன் தன் மெலிதானப் படகை, பொங்கிப்பாயும் ஆற்றில் செலுத்தி வெற்றி பெறுவதை நீ காணும் போது; அலை மோதும் வாழ்க்கை வெள்ளத்தினின்று நீயும் பத்திரமாய் வெளியேறுவது சாத்தியமே என உணர்வாய் நாம் தேவனிடம் திரும்ப விரும்பினால், நாமும் செய்யவேண்டிய காரியம் அதுவே.

**மனந்திரும்புவதற்கான நேரம்**

கடைகள் நிறைந்த மையம் ஒன்றில், காலத்தால் அழியாத செய்தி ஒன்றை - எண்ண முடியாத தலைமுறைக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகக் கொடுக்கப்பட்டு வந்த செய்தி ஒன்றை - ஒரு மனிதன் ஏந்தியவாறு நின்றுகொண்டிருந்தான். அவன் மக்களை 'மனந்திரும்புங்கள்' முடிவு சமீபித்திருக்கிறது என துரிதப்படுத்திக் கொண்டிருந்தான்.

400 வருட அமைதியின் முடிவு காலத்தில் தோன்றிய யோவான் ஸ்நானகனும் அதே செய்தியைத் தான் அளித்தான். அந்தக் காலத்திலெல்லாம் தேவன் தம் மக்களிடம் பேசவே இல்லை - பழைய ஏற்பாட்டின் முடிவுக்கும் புதிய ஏற்பாட்டின் ஆரம்பத்திற்கும் இடைப்பட்ட காலம் அது, இஸ்ரேல் மக்களுக்கு அது ஒரு புது அநுபவமாயிருந்தது. ஏனெனில், அவர்கள் வரலாறு முழுவதிலுமே தேவன் அவர்களுடன் தொடர்ந்து பேசி வந்தார்.

மக்கள் தங்களின் இந்த விசேஷித்த உறவைத் தொடர்ந்து காத்துக்கொள்ள விரும்பினால், அவர்கள் என்னசெய்ய வேண்டுமென்று தேவன் தீர்க்கதரிசிகள், தலைவர்கள், நியாயாதிபதிகள், இராஜாக்கள் மற்றும் ஆசாரியர்கள் மூலமாக மக்களிடம் பேசிவந்தார். பினனர் அதெல்லாமே நின்று போயிற்று. இனி எப்போதாவது தேவனிடமிருந்து வார்த்தை வருமா என்று மக்கள் ஐயப்பட்டிருக்கலாம். அப்படிப்பட்ட சமயத்தில் செய்தி அசாதாரணமான இடத்திலிருந்து வந்தது.

யோவான்ஸ்நானன் ஒரு ஆசாரியக் குடும்பத்தில் பிறந்தான். ஆசாரியர்களை நன்றாகக் கவனித்துக் கொள்ளக்கூடிய ஒரு சமுதாயத்தில் நல்ல தொரு வாழ்க்கை வாழ்ந்திருக்கலாம். ஆனால் தேவன் அதைவிட இன்னும் சவாலான ஒன்றைச் செய்யும்படி அழைத்த போது, அதையெல்லாம் விட்டுவிட்டான். அவன் வனாந்தரத்தில் வாழவேண்டியவனானான். முரட்டு ஆடை அணிந்தவனாய், மக்கள் தங்கள் வழிகளை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று அறைகூவல் விடுத்தான்.

அப்படி வாழ்வதன் மூலம் மதஸ்தாபனத்தின் மேல் தேவன் பிரியமாயில்லை. அது போதிப்பதை ஏற்றுக் கொள்ளவில்லை என்று காட்டினான். அவன் மக்களையும் மற்ற எல்லாரையுமே தங்கள் வழிகளை மாற்றிக் கொள்ளும் படியாக அழைத்தான். ஏனெனில் ஆச்சரியப்படத்தக்க ஒன்று நிகழவிருக்கிறது என்றான்.

**தேவனுடைய இராஜ்யம்**

மக்கள் தேவனிடம் திரும்ப வேண்டுமென்று இஸ்ரவேலிடம் கூறுவதற்காக யோவான் வந்தானென்று நமக்குச் சொல்லி புதிய ஏற்பாடு ஆரம்பமாகிறது. மாற்கு இவ்விதமாகக் கூறிகிறான்.

"தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் ஆரம்பம், இதோ, நான் என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன், அவன் உமக்கு முன்னே போய், உமக்கு வழியை ஆயத்தம் பண்ணுவான் என்றும், கர்த்தருக்கு வழியை ஆயத்தம் படுத்துங்கள். அவருக்குப் பாதைகளைச் செவ்வை





பண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டாகும் என்றும், தீர்க்கதரிசன ஆகமங்களில் எழுதியிருக்கிற பிரகாரமாய், யோவான் வனாந்தரத்தில் ஞானஸ்நானங்கொடுத்து, பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் குறித்துப் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருந்தான்" *(மாற்கு 1:1-4).*

வரப்போகிறதைப் பற்றிய முதல் செய்தியைக் கூறும் அறிக்கை இதுதான். (பொதுவாக மாற்கு தான், எழுதப்பட்டு வெளியிடப்பட்ட முதல் சுவிசேஷம் எனக் கருதப்படுகிறது.) பழைய ஏற்பாட்டு வாக்குத்தத்தத்தின் படியே இயேசுவின் வருகையை முன்னறிவிப்பவனாகவும், மக்களை மனந்திரும்ப அழைப்பவனாகவும் யோவான்ஸ்நானன் தோன்றினான். மத்தேயு சுவிசேஷம் அவன் வார்த்தைகளைச் சுருக்கமாகக் கூறுகிறது.

"மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது" *(மத்தேயு 3:2).*

இயேசு மக்களிடம் தன் போதனையை ஆரம்பித்த பொழுது, அவருடைய வார்த்தைகளும் இவைகளே!

"அதுமுதல் இயேசு மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்" *(மத்தேயு 4:17).*

முன்னறிவிப்பாளன், ராஜா ஆகிய இருவருமே ஒரே எச்சரிப்பைக் கொடுத்தனர். மக்கள் தங்கள் வழிகளை மாற்றிக்கொள்ள வேண்டும், ஏனென்றால் ஒரு புதிய ஒழுங்குமுறை வந்து கொண்டிருக்கிறது. பரலோக ராஜ்யம் அல்லது பரலோக ஆளுகை ஆரம்பிக்கப் போகிறது. அந்த ஆளுகையில் கீழ் வர விரும்புகிறவர்கள் தெரிந்து கொள்ள வேண்டியது ஒன்று உண்டு - அவர்கள் செல்லும் திசையை மாற்றிக் கொண்டு தேவனுடைய வழியில் நடக்க வேண்டும்.

**மனந்திரும்புதல் என்றால் என்ன?**

பக்தி வார்த்தைகள் இன்றைய நாகரீகமாக இல்லை - உலகின் சில பகுதிகளில் ஒரு காலத்தில் 'ஒப்புரவாதல்' போன்ற வார்த்தைகள் புழக்கத்திலிருந்தன. இப்பொழுது நிறைய பேருக்கு அந்த வார்த்தைபற்றி எதுவும் தெரியாது. 21ம் நூற்றாண்டில் தெம்ஸ் நதிக்கரையில் நின்று கொண்டு யோவான், 'மனந்திரும்புங்கள்' என்று அழைப்புவிடுத்தால், அந்த அழைப்புக்கு விளக்கம் தேவைப்படும். லண்டன் மக்களைப் பார்த்து 'மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறுங்கள்,' என அவன் கூறினால், மக்கள் 'நீ செய்த வற்றிற்காக வருத்தப்படு அல்லது ரொம்ப வருத்தப்படு' என்று அவன் சொல்வதாக நினைத்துக் கொள்வார்கள்.

ஆனால் முதல்நூற்றாண்டில் யோவானின் செய்தியைக் கேட்டவர்கள் பழைய ஏற்பாட்டு மொழியில் ஊறிப்போயிருந்தார்கள். அது அவர்கள் பக்திக் கடுத்த கலாச்சார மரபுவழி சுதந்திரம் (சொத்து) எவ்விதத் தயக்கமுமின்றி, தங்களின் வழிகளை மாற்றித் தேவனிடமாய் திரும்பும்படி யோவான் கேட்கிறான் என்று விளங்கியிருப்பார்கள்.

ஏனென்றால், பழைய ஏற்பாட்டுக் காலத்தில்! திரும்பத் திரும்ப, மக்கள் தங்கள் வழிகளைச் சீர்திருத்தி, தங்கள் வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்ளும் படி தேவன் தம் மக்களை அழைத்தார்.

**எரேமியா**

“உங்களில் அவனவன் தன் தன் பொல்லாத வழியையும், உங்கள் கிரியைகளின் பொல்லாப்பையும் விட்டுத் திரும்பி, கர்த்தர் உங்களுக்கும் உங்கள் பிதாக்களுக்கும் கொடுத்த தேசத்தில் சதா காலமும் குடியிருந்து, அந்நிய தேவர்களைப் பின்பற்றாமலும், அவைகளுக்கு ஆராதனை செய்யாமலும், அவைகளைப் பணியாமலுமிருந்து, உங்கள் கைகளின் செய்கைகளால் எனக்குக் கோபமுண்டாக்காமலும் இருங்கள்” (25:5,6).

**எசேக்கியேல்**

“திரும்புங்கள், உங்கள் நரகலான விக்கிரகங்களை விட்டுத் திரும்புங்கள்; உங்கள் சகல அருவருப்புகளையும் விட்டு உங்கள் முகங்களைத் திருப்புங்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்” (14:6).

**ஓசியா**

“இஸ்ரவேலே, உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்பு; நீ உன் அக்கிரமத்தினால் விழுந்தாய். வார்த்தைகளைக் கொண்டு கர்த்தரிடத்தில் திரும்புங்கள்; அவரை நோக்கி; தேவரீர் எல்லா அக்கிரமத்தையும் நீக்கி, எங்களைத் தயவாய் அங்கீகரித்தருளும், அப்பொழுது நாங்கள் எங்கள் உதடுகளின் காளைகளைச் செலுத்துவோம்.” (14:1-2)

**யோவேல்**

“ஆதலால் நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்புங்கள்; அவர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப் படுகிறவருமாயிருக்கிறார்” (2:12,13).



**சகரியா**

“உங்கள் பிதாக்களைப் போலிராதேயுங்கள்; முந்தின தீர்க்கதரிசிகள் அவர்களை நோக்கி, உங்கள் பொல்லாத வழிகளையும் உங்கள் பொல்லாத கிரியைகளையும் விட்டுத் திரும்புங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்று கூப்பிட்டார்கள்; ஆனாலும் எனக்குச் செவிகொடாமலும் என்னைக் கவனியாமலும் போனார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.” (1:4)

மனந்திரும்புதல் என்றால் தவறான காரியங்களை விட்டுத் திரும்பி, தேவன் பக்கமாய் திரும்புவது. அதைத் தான் யோவானும் கர்த்தராகிய இயேசுவும், இஸ்ரவேல் மக்கள் மறுபடியும் செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். மனந்திரும்புதல் என்றால் ஒருவரின் வாழ்க்கையின் திசையை மாற்றிக் கொள்ளுதல்.

**கெட்டதிலிருந்து நல்லதுக்கு மாறுதல்**

தேவையில்லாவிடில் யாரும் இப்படிச் செய்யக் கவலைப் படமாட்டார்கள். ஏன் செய்ய வேண்டும்? உன் வாழ்க்கையின் போக்கில் உனக்கு திருப்தி இருந்தால், இதை விடவும் நல்லது வேறொன்று இருப்பதாக நீ உணராவிட்டால், நீ போகிற போக்கில் போய்க்கொண்டிருப்பாய், வேதாகமக்காலத்து இஸ்ரவேல் மக்களின் நிலையும் கொஞ்சம் இப்படித்தான் இருந்தது. எல்லாம் நன்றாயிருந்தபோது, குறிப்பாக செழிப்பும் சமாதானமும் தேசத்தில் இருக்கும்போது தேவனையும் அவருடைய பிரமாணங்களையும் குறித்து அக்கறைப்பட்டோர் வெகுசிலரே. யாரும் இல்லை என்றே



சொல்லலாம். அதற்குப் பதில் ‘தங்கள் சொந்தக் காரியங்களைச்’ செய்துவந்தார்கள்.

ஆனால் கஷ்டம் வந்தபோதோ, அவர்களின் முதல் நினைவு தேவன்தான். காலமெல்லாம் அவர்கள் அவரை அசட்டை பண்ணியிருந்தாலும், அவர் ஏதாவது செய்ய வேண்டும் என எதிர்பார்த்தார்கள். இப்பொழுதும் மக்கள் அப்படித்தான் இருக்கிறார்கள். தங்களுக்குத் தேவை ஏற்படும் வரை, அவர்கள் தேவனை நினைப்பதில்லை, பின்னர், நடந்த தவறுக்கு அவர்கள் தேவனைக் குற்றஞ் சாட்டுவார்கள். இதை விட நல்லதொரு வழி இருக்கிறது.

சுபாவத்திலேயே, நம் சுயத்திற்கு சேவை செய்வதை நாம் விரும்புகிறோம். ஆகவே தான் சுயநலமனப்பான்மையை வளர்த்துக் கொள்வதும், நம்மையே கவனித்துக் கொள்வதும், பிறரைக்கவனித்துக் கொள்வதை விட சுலபமாயிருக்கிறது. நாம் அப்படித் தான் இருக்கிறோம். எவ்விதக் கட்டுப்பாடு மின்றி நம் வழிக்கு நம்மை விட்டு விட்டால், நாம் எதை வேண்டுமானாலும் செய்வோம். முடிவு நல்லதாயிராமல் கெட்டதாய்த் தான் இருக்கும். நல்லதைச் செய்து, நல்லவர்களாய் இருப்பது யாருக்கும் தானாய் வராது. மனிதனைக் குறித்து மிக நன்றாக அறிந்தவரான கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாம் எப்படி இருக்கிறோம் என்பது பற்றி விளக்கிக் கூறினார்.

மனுஷனுக்குள்ளே இருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும். எப்படியெனில், மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும் விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டுவரும். பொல்லாதவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும் *(மாற்கு 7:20-23).*

இப்படிப்பட்ட அட்டவணை புதிய ஏற்பாட்டில் அநேகம் உள்ளன. அவற்றில் நம் சுபாவ நிலைமை விவரிக்கப்பட்டிருக்கிறது. இந்த நடத்தை “மாம்சத்தின் கிரியை” என அழைக்கப்படுகிறது. *(எடுத்துக்காட்டாக கலாத்தியர் 5:19-21 மற்றும் ரோமர் 1:28-32 பார்க்கவும்)*

**கடினமான தெரிந்து கொள்ளுதல்களைச் சந்தித்தல்**

நாம் தெரிந்து கொள்ளவேண்டியது இங்கே இருக்கிறது. எதுவுமே செய்யாமல் இருந்தபடியே இருப்பதா அல்லது வேறு விதமான வாழ்க்கை முறையைத் தெரிந்து கொள்வதா? ஒன்றுமே செய்யாமலிரு; அப்போது மரித்துப் போவாய். மரணம் என்று வேதாகமம் சொல்வது உயிரோடு இருக்கமாட்டாய் என்பது பொருள். மக்கள் அதற்கு என்ன அர்த்தம் வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளலாம். உன் வழிகளை நீ மாற்றிக் கொள்; அப்பொழுது வேறுவிதமான வாழ்க்கையை நீ வாழலாம். அது உன்னை தேவனின் மனதுக்கு ஏற்றவனாய் வைக்கும். அதன் விளைவு சந்தோஷம், மனநிறைவு, கடைசியில் பூமியிலே தேவனுடைய ராஜ்யத்தில் நித்திய வாழ்வு. இது தான் உனக்கென உன் முன் வைக்கப்பட்டுள்ளது.

முற்றிலுமாக எதிர் திசையில் திரும்புவது - அதிலும் மக்கள் கூட்டம் சென்று கொண்டிருக்கும் திசையிலிருந்து முற்றிலும் எதிர் திசையில் திரும்புவது யாருக்கும் எளிதாய் இருப்பதில்லை - தேவனை விட்டு தூரமாய், இன்னும் தூரமாய்ப்போவது எளிதில்லைதான். அதற்கு முயற்சி தேவை. நம் சிந்தனையை மறுபடியும் வேதத்தின் வழிக்குக் கொண்டுவர, நமக்கு உதவ, வேதத்தில் இத்தகைய நல்ல முன்மாதிரிகள் உள்ளன.

நாம் செய்யவேண்டியவை குறித்து நடைமுறைக்குறிப்புகளையும் அவைகளை எப்படி செய்வதெனவும் அது (வேதம்) நமக்கு உதவுகிறது.